வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண்.4924/அ4/2023 நாள் : 30.11.2023

பொருள் : பள்ளிக் கல்வி – அரசுப் பள்ளிகளில் மிஷன் இயற்கை – சுற்றுச் சூழல் திட்டம் 2023 –2024 செயல்படுத்துதல் தொடர்பாக

பார்வை : 1.தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநர் செயல்முறைகள்ந.க.எண்.56667/எம்/இ2/2022 நாள்.22.5.2023 மற்றும் நாள்.08.11.2023
2.சென்னை–6. பள்ளிக்கல்வி இணை இயக்குநரின் (நாட்டுநலப்பணித்திட்டம்) செயல்முறைகள்ந.க.எண்.69206/எம்/இ2/2023 நாள்.28.11.2023

-----

பார்வையில் காணும் செயல்முறைகளுக்கிணங்க வேலூர் மாவட்டத்திலுள்ள அரசு பள்ளிகளில் காய்கறித்தோட்டம், மழைநீர் சேகரிப்பு முறை செயல்படுத்தல், கழிவு மேலாண்மை, நெகிழி ஒழிப்பு, விழிப்புணர்வு பேரணிகள் போன்ற பல்வேறு செயல்பாடுகள் மூலம் மாற்றங்களை உருவாக்கி, இம்மாற்றங்களின் கதைகளை காணொலி மூலம் பதிவிட்டு சிறந்த ஐந்து பள்ளிகளுக்கும், 25 மாணவர்களுக்கு விருதுகள் வழங்க அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு பள்ளிக் கல்வித் துறை World Wide Fund for Nature India (WWF India) துணையுடன் மிஷன் இயற்கை சுற்றுச் சூழல் திட்டத்தை 2023–2024 ஆம் ஆண்டில் HiTech labs வசதியுள்ள அரசுப் பள்ளிகளில் செயல்படுத்த உள்ளது. கடந்த ஆண்டில் நடைபெற்ற செயல் திட்டத்தின் தொடச்சியாக அரசுப் பள்ளிகளிள் இத்தட்டத்தை செயல்படுத்துவதற்கான தேவையான வழிகாட்டு முறைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தில் Hi Tec labs வசதிகள் உள்ள தங்கள் பள்ளிகளின் பெயர்களை தங்கள் சுற்றுச்சூழல் ஆசிரியர்கள் பெயர்களுடன் கீழே கொடுக்கப்பட்டுள்ள இணைய முகவரியில் பதிவிடவும். தங்கள் பள்ளிகளை இணை தளத்தில் பதிவு செய்ய கடைசி நாள் 5 டிசம்பர் 2023 ஆகும். (https//academy.wwfindia.org/MissionEeyarkai). இதில்

6ஆம் வகுப்பு முதல் 9 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களை ஈடுபடுத்தலாம்.

மேலும் மாவட்ட சுற்றுச் சூழல் ஒருங்கிணைப்பாளர்களுக்கும், பள்ளியின் சுற்றுச் சூழல் ஆசிரியர்களுக்கும் இத்திட்டத்திற்கான வழிகாட்டு பயிற்சிகள் 2023 டிசம்பர் முதல் வாரம் இணைய வழி வாயிலாக நடைபெறும் இப்பயிற்சிக்கு பள்ளி தலைமை ஆசிரியர்கள் தங்கள் பள்ளியிலிருந்து ஒரு சுற்று சூழல் ஆசிரியரை நியமிக்கவும். இதற்கான Zoomlink மற்றும் தேதி மாவட்ட சுற்றுச் சூழல் ஒருங்கிணைப்பாளர்களுக்கு குறுந்தகவல் வாயிலாக அனுப்பப்படும்.

ஒவ்வொரு பள்ளிகளிலும் 5 மாணவர்களை தேர்வு செய்து அவர்களின் பெயர்களை சுற்றுச் சூழல் ஆசிரியர் WWF India வின் ஒருங்கிணைப்பாளர்களுக்கு தெரிவிக்கவும். மேலும் இத்திட்டத்தின் இறுதியில் 2024 மார்ச் கடைசி வாரத்தில் சிறப்பாக செயல்படும் 5 பள்ளிகள் மற்றும் 25 மாணவர்களை மாநில அளவில் தேர்வு செய்து விருதுகள் வழங்கப்படும். இத்திட்டத்தின் நோக்கங்கள் மற்றும் செயல்முறைகள் மிஷன் இயற்கை கையேட்டில் கொடுக்கப்பட்டுள்ளது. மிஷன் இயற்கை கையேடு மற்றும் குறும்படங்கள், தகவல்கள் இணைய வழி வாயிலாக மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு வழங்கப்படும். மேலும் திட்டத்தின் செயல்பாடு கால அட்டவணை இக்கடிதத்துடன் இணைக்கப்பட்டுள்ளது (Roll out Plan)

மேலே குறிப்பிட்டுள்ள மிஷன் இயற்கை திட்டத்தை செயல்படுத்த தேவையான பள்ளி கல்வித்துறையின் வழிகாட்டு நெறிமுறைகளைப் பின்பற்றி செயல்படுத்துமாறு அனைத்து வகை பள்ளித் தலைமையாசரியர்கள் மற்றும் மாவட்ட சுற்றுச்சூழல் ஒருங்கிணைப்பாளர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு. Roll out Plan

//ஒம்//
முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர்
தலைமையாசிரியர்கள்
அரசு/ நகராட்சி/ உயர்நிலை/ மேல்நிலைப்பள்ளி,
வேலூர் மாவட்டம்.